55

# UNIVERSITY OF PERADENIYA

## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

தொடர் தொலைக்கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - පැරණි නිර්දේශය) පරීක්ෂණය - 2021 (දෙසැම්බර් - 2022)
பொதுக்கலைத் தேர்வு (வெளிவாரி – பழைய பாடத்திட்டம்) – 2021 (டிசம்பர் - 2022)
**Bachelor of Arts (External - Old Syllabus) Examination – 2021 (December – 2022)**

## TAMIL - II / தமிழ் - II

## TG II - குறிப்பிட்ட பாட நூல்கள்

## PRESCRIBED TEXTS

කාලය පැය**(03)** තුනයි.
மூன்று(03) மணித்தியாலங்கள்
Time three **(03)** Hours.

நொපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

முதலாம் வினா உட்பட, எவையேனும்
5 வினாக்களுக்கு விடை எழுதுக.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව---08-------- කි.
இந்த வினாப்பத்திரத்தில் ----08--- வினாக்கள் உள்ளன.

---

01. மேல்வரும் பாடல்களின் இலக்கியச் சிறப்பினை விளக்குக.

(அ) முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
விரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பின்
பரல்அவல்அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்பு றங்கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானம்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் டோன்றும் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும் பெருங் குன்றத்தமன்ற காந்தள்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே.

(ஆ) வழிபடு வோரை வல்லறி தீயே!
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே;
நீமெய் கண்ட தீமை காணின்,
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி;
வந்து, அடி பொருந்தி, முந்தை நிற்பின்,
தண்டமும் தணிதி, நீ பண்டையிற் பெரிதே;
அமிழ்துஅட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்தல் அல்லது, மள்ளர்
மலைத்தல் போகிய, சிலைத்தார் மார்ப!
செய்து இரங்காவினைச், சேண்விளங் கும்புகழ்,
நெய்தருங் கானல் நெடியோய்!
எய்த வந்தனம்யாம்; ஏத்துகம் பலவே!

02. தலைவியின் பொருட்டுத் தலைவனிடம் உரையாடும் தோழியின் மதிநுட்பம், அகநானூற்றுப் பாடல்களில் புலப்படுத்தப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

03. "அற இலக்கியங்களின் தோற்றுவாயாக, புறநானூறு அமைந்துள்ளது" - இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

04. முறை செய்து காப்பாற்றும் மன்னனது கடமைகளாக, திருவள்ளுவர் கருதுபவற்றைத் தொகுத்துக் கூறுக.

05. சடங்காசாரங்களை விடவும் தூய அன்பே உயர்ந்தது என்பதை, கண்ணப்பநாயனார் புராணத்தினூடாக, சேக்கிழார் வலியுறுத்துமாற்றை விவரிக்குக.

06. "பக்தி இலக்கிய வரலாற்றில் ஆண்டாளின் படைப்புகள் தனித்துவமானவை" – ஆதாரங்களை எடுத்துக்காட்டி ஆராய்க.

07. பாரதியாரின் சுயசரிதையில் வெளிப்படும் சமுதாய விமரிசன அம்சங்களை எடுத்துரைக்குக.

**அல்லது**

இசைக்கலை மீதான பாரதியாரின் ஈடுபாடு குயில்பாட்டில் வெளிப்படுமாற்றை விவரிக்குக.

08. வெள்ளிப்பாதசரம் எனும் சிறுகதைத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையர்கோனின் எடுத்துரைப்புத்திறனை மதிப்பிடுக.